செ.வெ.எண்.582 நாள் 12.07.10

<u>பத்திரப்பதிவுத் துறையில் கட்டிட கள ஆய்வுக்கான உச்சவரம்பு உயர்வு</u>

பொது மக்கள் விவசாய நிலங்களையும், காலிமனைகளையும் உரிமை மாற்றம் செய்யும் போது ஆவணப்பதிவுக்குப் பிறகு உடனடியாக ஆவணம் திரும்ப வழங்கப்படுகிறது. கட்டிடத்துடன் கூடிய மனைகளைப் பொருத்தமட்டில் பதிவு அலுவலரால் நேரில் சென்று கட்டிடத்தினை ஆய்வு செய்த பிறகே ஆவணம் திரும்ப வழங்கப்படுகிறது. இந்நடைமுறையால் ஏழை, எளிய மக்களால் கிரையம் பெறும் குறைந்த மதிப்புடைய வீடுகளுக்கும் கூட ஆய்வு மேற்கொள்வதால் ஆவணம் திரும்ப கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாலும் மேலும், ஆய்வு அலுவலர்களுக்கு ஏற்படும் பணி பளு ஆகியவற்றை கருத்தில் கொண்டு கட்டிடத்தின் மதிப்பு ரூ.25,000/-க்கு உட்பட்டிருப்பின் கள ஆய்வு செய்ய வேண்டியதில்லை என தமிழக அரசு 1989-ம் ஆண்டு ஆணை பிறப்பித்திருந்தது. கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வை கருத்தில் கொண்டு இவ்வரம்பு ரூ.50,000/- என 2003-ம் ஆண்டு உயர்த்தப்பட்டது. கட்டுமான செலவுகள் 2003-க்கு பின்னர் பெருமளவு உயர்ந்துள்ளதை கருத்தில் கொண்டும், சார்பதிவாளர்களின் பணி பளுவினை குறைக்கும் பொருட்டும் இவ்வரம்பு கடந்த 7 ஆண்டுகளாக உயர்த்தப்படாததினால் பயனாளிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து விட்டதாலும் ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை துரிதமாக திரும்ப வழங்கிடும் பொருட்டும் இந்த உச்சவரம்பை அரசு உயர்த்தும் என மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ் ராஜன் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி தமிழக அரசு, புதிய உத்தரவு ஒன்றினை அரசு ஆணை எண்.114 வணிகவரி மற்றும் பதிவுத்துறை நாள் 16.06.2010-ல் பிறப்பித்துள்ளது. இந்த ஆணையின்படி கிராம பஞ்சாயத்து மற்றும் நகரப்பஞ்சாயத்து பகுதிகளில் ரூ.1,00,000/-க்கு குறைவாக கட்டிட மதிப்புள்ள ஆவணங்களை பொருத்தும், நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளை பொருத்து ரூ.2,00,000/-க்கும் குறைவாக கட்டிடமதிப்புள்ள ஆவணங்களைப் பொருத்தும், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் (DTCP) மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடத்துடன் தாக்கலாகும் ஆவணங்களைப் பொருத்து கட்டிட மதிப்பு எவ்வளவு இருந்தாலும் கட்டிட களப்பணி மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனால் அடித்தட்டுமக்கள் நடுத்தர வர்க்கத்தினர் வீடு வாங்கும்போது பத்திரப் பதிவு முடிந்தவுடன் ஆவணத்தை திரும்ப பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வங்கிகளில் கடன்பெற்று வீடுவாங்குபவர்கள் கடனுக்காக தங்களது வீட்டு பத்திரத்தை உடனடியாக வங்கிகளில் தாக்கல் செய்யவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

அரசின் இந்த அறிவிப்பு உடனடியாக அமுலுக்கு வருகிறது என்று ரா.சிவகுமார், இ.ஆ.ப., பதிவுத்துறைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

2/2

12.7.2010

பதிவுத்துறைத்தலைவருக்காக

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

12.7